

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 26.03.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்




We Shine Academy TM







The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

# தமிழக நிகழ்வுகள்

- கெரோனா நோய்த் தடுப்புக்காக போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக அரசின் சார்பில் ரூ.3780 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
    - 10,158 படுக்கைகள், மருத்துவமனைகளில் தயார் நிலையில் உள்ளன. மேலும், படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க உத்தரவிட்டுள்ளார்.
    - **செய்தித்துளிகள்:**
        - மகாத்மா காந்தி, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், இந்த மாதத்தில் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு, 2 நாள்களுக்கான ஊதியம், சிறப்பு நிதியாக கூடுதலாக வழங்கப்படும். அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது, உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் மிக, மிக அவசியம்.

# தேசிய நிகழ்வுகள்

- தேசிய மக்கள்தொகை பதிவேட்டை (என்பிஆர்) புதுப்பிக்கும் பணிகள், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021-இன் முதல்கட்டப்

பணிகள் ஆகியவை ஒத்திவைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

- கரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் நடவடிக்கையாக நாடு முழுவதும் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது. முன்னதாக இந்தப் பணிகள் ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள்ளாக நடத்தி முடிக்கப்பட இருந்தது குறிப்பிடத்தக்கது.
- **செய்தித்துளிகள்:**
  - மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2021-இன் பணிகளானது, ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை முதல் கட்டமாகவும், அடுத்த ஆண்டு பிப்ரவரி 9 முதல் 28 வரை 2-ஆம் கட்டமாகவும் மேற்கொள்ளப்பட இருந்தது.
  - இதில் முதல்கட்டப் பணிகளோடு, அஸ்ஸாம் தவிர அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் என்பிஆரை புதுப்பிக்கும் பணிகளையும் சேர்த்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

We Shine Academy™

- பிகாரில் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் மார்ச் 25 ஆம் தேதி அன்று ரூ.1 கோடி நிதியுதவி வழங்கினார்.
  - ‘கரோனா வைரஸ் பாதிப்புக்கு சிகிச்சையளிக்கவும், தேவையான மருத்துவ உபகரணங்களை வாங்கவும் எம்.பி.

நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என தெரிவித்துள்ளார்.

- **செய்தித்துளிகள்:**
  - தங்கள் தொகுதிகளில் மக்கள் நலத்திட்டங்களை மேற்கொள்ள எம்.பி. நிதியின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.5 கோடி வழங்கப்படுகிறது.

- **மணல் சிற்பத்தின் மூலம் கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் ஒடிசாவை சேர்ந்த பிரபல மணல் சிற்பக்கலைஞர் சுதர்சன் பட்நாயக்கிற்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.**
  - பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடிக்க வலியுறுத்தி புவனேஷ்வரில் மணற்சிற்பங்களை உருவாக்கியுள்ளார்.
  - இதனை பாராட்டும் வகையில் உலக சுகாதார அமைப்பின் டைரக்டர் ஜெனரல் அதானோம் கெப்ரேயுசு உலகிற்கு வலுவான செய்திகளை சொல்ல கலை ஒரு சக்திவாய்ந்த ஆயுதம் என்று குறிப்பிட்டுள்ளார்.
  - **செய்தித்துளிகள்:**
    - **பத்மஸ்ரீ விருது பெற்ற பட்நாயக், உலகம் முழுவதும் 50 க்கும் மேற்பட்ட சர்வதேச மணல் சிற்ப சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்று பல விருதுகளை வென்றுள்ளார்.**

- **கரோனா பரவல் எதிரொலியாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, ரூ. 50 லட்சம் மதிப்புள்ள அரிசியை முன்னாள் கேப்டன் சவ்ரவ் கங்குலி இலவசமாக வழங்குகிறார்.**
  - கரோனா பரவுவதைத் தடுக்கும் பொருட்டு மார்ச் 24-ஆம் தேதி நள்ளிரவு முதல் வரும் ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி வரை இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
  - இந்நிலையில் விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கின் காரணமாக பாதிக்கபட்டுள்ள மக்களுக்கு, ரூ. 50 லட்சம் மதிப்புள்ள அரிசியை முன்னாள் கேப்டன் சவ்ரவ் கங்குலி இலவசமாக வழங்குகிறார்.
  - **செய்தித்துளிகள்:**
    - சீனாவில் வூஹான் மாகாணத்தில் கண்டறியப்பட்ட கரோனா வைரஸ் தற்போது உலகத்திற்கே அச்சுறுத்தலாக உருமாறியுள்ளது.
    - இதுவரை **இந்தியாவில் 539 பேர் இந்த வைரஸ் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்து பேர் பலியாகியுள்ளனர்.**

We Shine Academy™

# திருக்குறள்

**குறள் எண்:** 149

**பால்:** அறத்துப்பால்

**இயல்:** இல்லறவியல்

**அதிகாரம்:** பிறனில் விழையாமை

**குறள்:**

**நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**

**பிறர்க்குரியாள் தோள்தோயா தார்**

**விளக்கம்:**

கடலால் சூழப்பட்ட உலகில் எல்லா நன்மைகளுக்கும் உரியவர் யார் எனில், பிறன் மனைவியின் தோளைச் சேராதவரேயாவார்.

We Shine Academy™